


# ஆகஸ்ட் 9 - புனித ஜெரார்ட் மஜெல்லா (1726-1755)

இவருக்கு திவ்விய நற்கருணை மீது மிகுந்த பக்தி உண்டு. "கடவுளுக்காகவே வேதனையை அனுபவிளு அப்படியானால் பூமியிலேயே மோட்சத்தை அனுபவிப்பாய்" என்று இவர் அடிக்கடி சொல்லுவார். இவர் இரட்சகர் சபையில் துணைச்சகோதரராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவர் ஆழ்ந்த தாழ்ச்சி உள்ளவர். தூய்மையே உருவானவர். கீழ்ப்படிதலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். சபையில் வழக்கமாக மூன்று வார்த்தைப்பாடுகள் கொடுப்பார்கள். இவரோ இன்னொரு வார்த்தைப்பாட்டையும் சேர்த்து எடுத்தார். மிகச் சிறந்ததாக தெரிவதையே எப்பொழுதும் செய்வதாக வாக்களித்தார். "கடவுளுக்காகச் செய்யப்படுவதனைத்தும் செபமாக மாறுகிறது" என்று இவர் கூறினார்.

கடவுள் இவருக்குப் பல அரிய வரங்களைக் கொடுத்திருந்தார். ஒரே நேரத்தில் இரு இடங்களில் இருந்து வரும் காரியங்களை முன்னறிவித்தார். மக்களது மீது மிகுந்த வல்லமை கொண்டிருந்தார். பெரியவர்களது கட்டளைகளையும், விருப்பங்களையும் நுணுநுணுக்கமாக நிறைவேற்றுவார். உடலை அடக்கி கடுந்தவ முயற்சிகள் செய்வார். கிடைத்த ஒவ்வொரு வினாடியையும் திருப்பேழையின் முன் செலவழிப்பார். கோவிலை விட்டு வெளியேறுமுன் "ஆண்டவரே உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன் என்னைப் போகவிடும். நான் செய்ய வேண்டி வேலை இருக்கிறது" என்று சொல்லி, வெளியேறுவார். பிரசங்கம் செய்யும்படி பல இடங்களுக்கு இவரையும் அழைத்துச் செல்வார்கள். இவர் உருக்கமாகச் செபித்து கன்னெஞ்சரான பாவிகளையும் மனந்திருப்புவார். குருக்கள் தங்கள் மறையுரைகளால் செய்த நலன்கைள விட இவர் தமது செபங்களால் அதிக நன்மைன செயதாரென ஒரு குருவுக்கு கடவுள் அறிவித்தார். இவரது அறையின் கதவில், "கடவுள் விரும்புவதை, கடவுள் விரும்புவது போல் கடவுள் விரும்பும் வரை இங்கு செய்யப்படுகிறது" என்று எழுதி வைத்திருந்தார்.

சிந்தனை: கடவுளது சித்தத்தை என்றும் மகிழ்ச்சியோடு நிறைவேற்ற வேண்டும்.

செபம்: புனித ஜெரார்ட் மஜெல்லா, திருப்பேழையில் இருக்கும் இயேசுவை உயிருள்ள விசுவாசத்தோடு அணுகி வாழ்வின் சங்கடங்கள் சகிப்பதற்கான பலத்தை அவர்களிடமிருந்து பெற எங்களுக்கு வரம் பெற்றுத்தாரும்.